**ஸ்டான்டர்ட் சாட்டர்ட்**
# கணக்கு விதிமுறைகள்

## 1. அறிமுகம்

1.1 இந்த கணக்கு விதிமுறைகளில் பொது விதிமுறைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

## 2. வரைவிலக்கணங்கள்

இக் கணக்கு விதிமுறைகளில் பயன்படுத்தப்பட்டு, வரைவிலக்கணம் தரப்படாத பதங்கள் பொது விதிமுறைகளில் குறித்துரைக்கப்பட்ட அர்த்தங்களைப் பெறும்.

**"கணக்கை ஆரம்பிக்கும் விண்ணப்பப் படிவம்"** என்பது நீங்கள் கணக்கை ஆரம்பித்துச் செயற்படுத்துவதற்காக நிரப்பிக் கையொப்பபடும் எமது விண்ணப்பப் படிவத்தைக் குறிக்கும்.

**"பண வைப்பு"** என்பது பணமாக அல்லது இலத்திரனியல் பரிமாற்றத்தின் மூலம் செய்யப்படும் வைப்பைக் குறிக்கும்.

**"சேகரிப்பு"** என்பது பணம் அல்லாத வைப்புக்களுக்கான நடைமுறையைக் குறிக்கும். இங்கு சம்பந்தப்பட்ட பெறுநர் அல்லது செலுத்துநரிடமிருந்து, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் நிபந்தனையற்ற நிதியில் நாம் கொடுப்பனவைப் பெறுகிறோம் அல்லது பெற முயல்கிறோம். **"சேகரித்தல்"** என்பதும் அதனையொத்த அர்த்தத்தையே தரும்.

**"வைப்பு"** என்பது ஒரு கணக்கில் உங்களால் அல்லது உங்கள் சார்பில் இன்னுமொருவரால் வைப்புச் செய்யப்படும் பணத்தைக் குறிக்கும்.

**"பிரதான கணக்கு"** என்பது மெய்நிகர் கணக்கு இலக்கத்திற்கு வரவு வைப்பதற்கான நீங்கள்குறித்துரைக்கும் கணக்கைக் குறிக்கும்.

**"பணம் அல்லாத வைப்பு"** என்பது பணம் அல்லது இலத்திரனியல் பரிமாற்றம் தவிர்ந்த வேறு வழியில் செய்யப்படும் வைப்பைக் குறிக்கும்.

**"மெய்நிகர் கணக்கு இலக்கங்கள்"** என்பது உங்கள் செலுத்துநர்களுக்கு நீங்கள் ஒதுக்கீடு செய்வதற்காக நாம் வழங்கும் மெய்நிகர் கணக்கு இலக்கங்களாகும்.

**“மீளப்பெறுகை”** என்பது கணக்கிலிருந்து உங்களால் அல்லது உங்கள் சார்பில் இன்னுமொருவரால் மேற்கொள்ளப்படும் மீளப்பெறுகையை அல்லது இடமாற்றத்தைக் குறிக்கும்.

## 3. வைப்புக்கள்

3.1 **பண வைப்புக்கள்:** ஏதேனும் பண வைப்பிற்குச் சமமான தொகையை உரிய கணக்கில் நாம் வரவு வைப்போம். ஒரு கணக்கில் வரவாக இருக்கும் தொகையை மட்டுமே அக் கணக்குப் பேணப்படும் சேவை ஸ்தானத்தில் மீள வழங்க முடியும்.

3.2 **பணம் அல்லாத வைப்புக்கள்:** சேகரிப்பிற்காக எம்மிடம் சமர்ப்பிக்கப்படும் பணம் அல்லாத வைப்புத் தொகை கணக்கில் வரவு வைக்கப்படும். எனினும், நாம் வேறு விதமாக அனுமதிக்காத பட்சத்தில், முழுமையான மற்றும் இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் வரை, அத் தொகையை நீங்கள் மீளப்பெறவோ இடம்மாற்றவோ முடியாது.

3.3 **கடன்:** எம்மால் எமது சுயநிர்ணயத்தின் படி பணம் அல்லாத வையுக்களுக்குக் குறிப்பிட்ட வரம்பிற்குள (எம்மால் குறிப்பிடப்படும்) உடனடிக்கடனானது எமக்குக் கொடுப்பனவு பெறப்பட்டதா, இல்லையோ என்பது கவனத்திற் கொள்ளப்படாது வழங்கப்படும்.

3.4 **அங்கீகரிக்கப்படாத வைப்புக்கள்:** அங்கீகரிக்கப்படாத பணம் அல்லாத வைப்பு பெறப்படுமாயின்,அவற்றின் பெறுமதியை உங்கள் கணக்கில் வரவு வைக்க நாம் மறுக்கக் முடியும். அத்தகைய சந்தர்ப்பத்தில், அத்தகைய பணம் அல்லாத வைப்பு உங்களுக்குத் திருப்பி அனுப்பப்படும் அல்லது, நீங்கள் வேண்டுகோள் விடுத்தால், மீண்டும் சேகரிப்பிற்காக மீளச் சமர்ப்பிக்கப்படும்.

3.5 **உங்கள் கணக்குகளில் பற்று வைத்தல்:**

14 தினங்களுக்குள் (அல்லது ஒப்புக்கொள்ளப்படும் வேறேதும் காலப்பகுதிக்குள்) எமக்குப் பெறுமதியெதுவும் கிடைக்காத பட்சத்தில், அத்தகைய பணம் அல்லாத வைப்பை கொடுப்பனவு செலுத்தப்படாத வைப்பாக எம்மால் கருத முடியும். இதனால் ஏற்படும் சகல அறவீடுகளும்
(பரிவர்த்தனை வீத வித்தியாசங்கள் அவையும் உட்படும்) உங்கள் கணக்கில் பற்று வைக்கப்படும்.

3.6 **வைப்புச் சீட்டுக்கள்:** பணம் அல்லாத வைப்புடன் சமர்ப்பிக்கப்படும் வைப்புச் சீட்டில் தவறுகள் அல்லது விடுபடுகைகள் காணப்படுமாயின், நாம் அதனைத் திருத்த முடியும். அவ்வாறு திருத்தப்பட் வைப்புச் சீட்டே சகல நோக்கங்களுக்கும் இறுதியானதாகக் கொள்ளப்படும்.

3.7 **நேரடிப் பற்றுச் சேகரிப்புச் சேவைகள்:** தமது கணக்குகளில் பற்று வைத்து, அவ்வாறு பற்று வைக்கபட்ட தொகையை நேரடிப் பற்று வைப்பு அல்லது வேறேதும் பொருத்தமான கிளியரிங் முறையினுடாக எம்மிடமுள்ள உங்கள் குறித்துரைக்கப்பட்ட கணக்கில் வரவு வைக்கும்படி தமது வங்கியாளர்களுக்கு முறைப்படியான அதிகாரமளிப்பையும் அறிவுறுத்தலையும் வழங்கியவர்களிடமிருந்து உங்களுக்குக் கிடைக்க வேண்டிய கொடுப்பனவுகள் தொடர்பாக நீங்கள் அறிவுறுத்தல் விடுக்கும் பட்சத்தில் நாம் உங்கள் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுப்போம்.

3.8 **உங்கள் வைப்புப் பிரதிநிதித்துவம்:** நீங்கள் பணம் அல்லாத வைப்பிற்கான முழுச் சட்டபூர்வ உரிமையைக்

கொண்டிருப்பதுடன் அந்த பணம் அல்லாத வைப்பில், காணப்படும் கையொப்பங்கள், புறக்குறிப்புகள் மற்றும் விபரங்களின் உண்மைத் தன்மை, செல்லுபடியாகும் தன்மை, சரிநுட்பம் என்பவற்றை முழுப்பொறுப்புடன் ஏற்றுக்கொள்வதாகவும் பிரதிநிதித்துவம் செய்து உத்தரவாதம் அளிக்கிறீர்கள்.

3.9 **தவிர்ப்பு:** பொது விதிகளிலுள்ள பொறுப்புக்களின் வரையறை தொடர்பான

சரத்திற்கு முரணாகாத வகையில், ஏதேனும் பிரதிநிதித்துவ வங்கி அல்லது எமது முகவரின் கவனயீனம் அல்லது தவறான நடத்தை அல்லது இயலாமை காரணமாக ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்பிற்கு நாம் பொறுப்பாளியாக மாட்டோம்.

3.10 **ஏனைய வங்கிகளின் கட்டணங்கள்:** ஏதேனும் கொடுக்கல் வாங்கலுக்காக உங்கள் மீது அல்லது எங்கள் மீது வேறேதும் வங்கியினால் விதிக்கப்படும் கட்டணங்களை நீங்கள் செலுத்த வேண்டும்.

3.11 **நலவுரிமை வழங்கப்படாமை:** கணக்கில் வரவாகவுள்ள சகல மீதிகளுக்கும் நீங்களே தொடர்ந்து உரித்தாளியாக இருக்க வேண்டும். இது தொடர்பில் உரிமைகள், பிணைகள் அல்லது நலவுரிமைகள் எதனையும் எந்தவொரு மூன்றாம் தரப்பிற்கும் வழங்கக் கூடாது.

## 4. மீளப்பெறுகைகள்

4.1 **மீளப்பெறுகைகள்:** பின்வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே ஒரு கணக்கிலிருந்து மீளப்பெறுகைகள் அனுமதிக்கப்படும்:

(அ) மீளப்பெறுகைக்குப் போதுமானளவு பணம் கணக்கில் இருக்க வேண்டும்.

(ஆ) உங்கள் கொடுப்பனவு அறிவுறுத்தல் எமது குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் முறையாக நிரப்பிச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(இ) கணக்குப் பேணப்படும் சேவை ஸ்தானத்திலேயே மீளப்பெறுகை செய்யப்பட வேண்டும்.

4.2 **காசோலைகளை நிறுத்துதல்:** நீங்கள் உங்களது கணக்கின் பேரில் எழுதிய ஏதேனும் காசோலையை நாம் நிராகரிக்க வேண்டுமென நீங்கள் விரும்பினால், அது பற்றிய சகல பொருத்தமான விபரங்களுடனும் நீங்கள் எமக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். உங்கள் வேண்டுகோளை நிறைவேற்ற நாம் முயற்சி செய்வோம். எனினும், அவ்வாறு முடியாதவிட்டது (அல்லது சம்பந்தப்பட்ட காசோலை ஏற்கனவே மாற்றப்பட்டுவிட்டால்) நாம் அதற்கு பொறுப்பாளியாக மாட்டோம்.

## 5. மேலதிகப் பற்றுக்கள்

5.1 **அதிகாரமற்ற மேலதிகப் பற்றுகள் வழங்கப்பட மாட்டா:** உங்கள் கணக்கில் மேலதிகமாகப் பற்று வைக்கக் கூடாது. மேலதிகப் பற்றுக்கான உச்சவரம்பு ஒன்று இருந்தால், அதனை மீறக் கூடாது.

5.2 **மேலதிகப் பற்றுக்கான வேண்டுகோள்கள்:**
கணக்கொன்றிற்காக நாம் அங்கீகரிக்கக்கூடிய ஏதேனும் மேலதிகப் பற்றுக்கள் மேலதிக விதிமுறைகளை உள்ளடக்கியதாக இருக்கும். மேலதிகப் பற்று உச்சவரம்புகள் எந்த நேரத்திலும் இரத்துச்செய்யப்படலாம்.

5.3 **தன்னியல்பான மேலதிகப் பற்றுங்கள்:** உங்களுக்கு அறிவிக்காமலே உங்கள் கணக்கில் மேலதிகப் பற்றைச் செய்வதற்கு நாம் இடமளித்திருந்தால், மேலதிகப் பற்று தொடர்பான இந்தச் சரத்து செல்லுபடியாகும்.

5.4 **கோரும்போது மீளளிப்பு:** கணக்கின் பற்று மீதியைக் கோரும்போது நீங்கள் மீளளிக்க வேண்டும்.

5.5 **வட்டி:** சகல மேலதிகப் பற்றுக்களுக்கும் நாம் வட்டி அறவிடுவோம். காலத்திற்குக் காலம் நாம் அறிவிக்கும் வீதத்தில், எமது சேவை நிலையத்தின் வழமையான நடைமுறைக்கு அமையக் கணிக்கப்படும் வட்டியானது தினசரி அடிப்படையில் சேர்க்கப்படும்.

## 6. கணக்கு விபரங்கள்

6.1 **கால இடைவெளியும் முறையும்:** எமது சேவை நிலையத்தின் வழமையான நடைமுறைக்கு அமைவாக, உங்கள் கணக்கு விபரக்கூற்றுகள் மற்றும் தகவல்களை அனுப்புவோம்.

6.2 **கணக்கு விபரங்களை உறுதிப்படுத்துதல்:** உங்கள் கணக்கு விபரக்கூற்றுக்கள், ஊர்ஜிதப்படுத்தல்கள் மற்றும் தகவல்களை நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டும். அவற்றில் ஏதேனும் தவறு இருப்பின் 30 தினங்களுக்குள் எழுத்து மூலம் எமக்கு அறிவிக்க வேண்டும்.

## 7. கணக்கு வரவு மீதிக்கான வட்டி

7.1 வட்டி வழங்குவதாக நாம் ஒப்புக்கொண்டிருந்தால், உங்கள் கணக்கு மீதிகளுக்கு நாம் வட்டி வழங்குவோம். நாம் வழங்கும் வட்டியானது நாம் உங்களுக்கு அறிவித்த அல்லது உங்கள் கணக்குப் பேணப்படும் கிளையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள வீதத்தின் அடிப்படையில் அமைந்திருக்கும்.

## 8. கொடுப்பனவுப் பத்திரங்களுக்கான பொறுப்பு

8.1 **காசோலைப் புத்தகங்கள்:** உங்களுக்குத் தபால் மூலம் அனுப்பப்படும் காசோலைப் புத்தகம் இன்னுமொருவரால் பெறப்பட்டு, அவர் அதைப் பயன்படுத்தினாலும், அக் காசோலைப் புத்தகத்திற்கு நீங்களே பொறுப்பு.

8.2 **கொடுப்பனவுப் பத்திரங்கள்:** பொது விதிகளின் கீழ் எமக்குப் பொறுப்பு இருந்தால், அந்தப் பொறுப்பு கொடுப்பனவுப் பத்திரத்தின் முகப்பெறுமதிக்கு மட்டுமானதாக இருக்கும். பின்வரும் சந்தர்ப்பங்களிற்கூட, ஒரு கொடுப்பனவுப் பத்திரம் தொடர்பாகச் செயற்படுவதால் எமக்கு இழப்பு ஏற்படுமாயின், நீங்களே அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு, எமது கோரிக்கையின் பேரில் எமக்கு இழப்பெதிர்காப்பு வழங்க இணங்க வேண்டும்:

(அ) கொடுப்பனவுப் பத்திரம் வேறொருவரால் அனுப்பப்பட்டபோதிலும் உங்களாலேயே அனுப்பப்பட்டதாகத் தோன்றுதல்.

(ஆ) கொடுப்பனவுப் பத்திரத்தில் தவறு இருத்தல்.

(இ) கொடுப்பனவுப் பத்திரத்தை அனுப்புவதில் அல்லது பெறுவதில் தாமதம் நிகழுதல்.

## 9. மெய்நிகர் கணக்கு (Virtual account) இலக்கங்கள்

9.1 **மெய்நிகர் கணக்கு இலக்கங்களை வழங்குதல்:**

உங்கள் வேண்டுகோளின் பேரில்,

பிரதான கணக்குடன் தொடர்புபடுத்தப்பட்ட மெய்நிகர் கணக்கு இலக்கங்களை நாம் உங்களுக்கு வழங்கக்கூடும்.

9.2 **பிரதான கணக்கில் வரவு வைக்கப்பட்ட வைப்புக்கள்:**

மெய்நிகர் கணக்கு இலங்கங்களுக்கான வைப்புக்கள் தன்னியல்பாகவே உரிய பிரதான கணக்கில் வரவு வைக்கப்படும்.

9.3 **கணக்கு விபரக்கூற்றுக்கள்:**

மெய்நிகர் கணக்கு இலக்கங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட வைப்புக்களைக் காட்டும் கணக்கு விபரக்கூற்றுக்களை நாம் உங்களுக்கு அனுப்புவோம்.

9.4 **பிரதான கணக்கின் மாற்றம்:** நீங்கள் பிரதா கணக்கொன்றை மாற்ற விரும்பினால் அது பற்றி எழுத்து மூலம் எமக்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய அறிவித்தல் தொடர்பாகச் செயற்பட, நீங்கள் எமக்கு நியாயமான கால அவகாசம் தர வேண்டும்.

## 10. இடைநிறுத்தம், மூடுதல் மற்றும் முடிவுறுத்துகை

10.1 **கணக்குகளை மூடுதல்:**

(அ) உங்கள் கணக்கை நாம் எந்த நேரத்திலும் இடைநிறுத்த அல்லது மூடிவிட முடியும். நாம் அவ்வாறு கணக்கை மூடினால்

இயன்றளவு விரைவாக உங்களுக்கு அறிவிப்போம்.

(ஆ) உங்கள் எழுத்துமூல அறிவித்தல் கிடைக்கும் பட்சத்திலும், நாம் உங்கள் கணக்கை மூடுவோம். நீங்கள் எமக்குச் செலுத்த வேண்டிய ஏதேனும் தொகைகளைக் கழித்துவிட்டு, கணக்கிலுள்ள மீதிப் பணத்தை நாம் உங்களுக்கு மீளளிப்போம்.

10.2 **ஒப்பந்தத்தின் முடிவுறுத்துகை**: உங்கள் கணக்குகள் அனைத்தும் மூடப்பட்ட பின்னர், பொது விதிகளின் கீழ் செல்லுபடியாகவுள்ள ஏற்பாடுகளைத் தவிர, ஒப்பந்தம் செயலிழந்துவிடும். ஆனால், கணக்கு மூடப்பட்ட வேளையில் அல்லது அதற்கு முன்னர் சேர்ந்திருந்த ஏதேனும் உரிமைகள் அல்லது கடமைகள் தொடர்ந்து நடைமுறையிலிருக்கும்.

**10.3 மூடுகையின் பின்பு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள்:**

உங்கள் கணக்கு மூடப்பட்ட பின்பு நாம் ஒரு மீளப்பெறுகையைச் செயற்படுத்தியிருந்தால், அத் தொகையைக் கோரிக்கையின் பேரில் எமக்கு மீளளிக்க நீங்கள் இணங்குகின்றீர்கள்.

10.4. **உரிமை கோரப்படாத வரவு மீதிகள்:** மூடப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட ஒரு கணக்கில் அல்லது செயலற்றதென நாம் வகைப்படுத்திய ஒரு கணக்கில் உரிமை கோரப்படாமலிருக்கும் ஏதேனும் வரவு மீதிக்கு நாம் வட்டி வழங்க மாட்டோம்.

10.5 **கணக்கின் மாற்றம்:** ஒரு வகையான கணக்கை இன்னுமொரு வகைக் கணக்காக மாற்றும்போது, நாம் அது பற்றி உங்களுக்கு அறிவிப்போம்.

## 11. முரண்பாடுகள்

11.1 (அ) இக் கணக்கு விதிமுறைகளுக்கும் கணக்கை ஆரம்பிக்கும் விண்ணப்பப் படிவ விதிகளுக்கும் இடையே முரண்பாடுகள் இருப்பின், கணக்கு விதிமுறைகளே ஆதிக்கம் செலுத்தும்.

(ஆ) இக் கணக்கு விதிமுறைகளுக்கும் உள்நாட்டுப் பிற்சேர்ப்பு விதிகளுக்கும் இடையே இடையே முரண்பாடுகள் இருப்பின், உள்நாட்டுப் பிற்சேர்ப்பு விதிகளே ஆதிக்கம் செலுத்தும்.

தமிழ் மொழிமூல மற்றும் ஆங்கில மொழிமூல வாசகங்களுகிடையே முரண்பாடுகள் ஏற்படுமிடத்து, ஆங்கில மொழிமூல வாசகங்களை எல்லாத தேவைகளின் போதும் மேலோங்கும்.